**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(08.12.2016 முதல் 12.12.2016)**

**அறிக்கை எண் 98/2016** **தேதி: 07.12.2016**

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 23° செ முதல் 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 18°செ முதல் 26°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 13°செ முதல் 19°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 8° செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (08.12.2016 முதல் 12.12. 2016)**

வரும் நாட்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை் 20°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 55 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 7 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 08.12.16 | 0 | 30 | 20 | 5 | 75 | 55 | 7 | கிழக்கு |
| 09.12.16 | 0 | 30 | 20 | 5 | 75 | 55 | 7 | கிழக்கு |
| 10.12.16 | 0 | 30 | 20 | 5 | 75 | 55 | 7 | கிழக்கு |
| 11.12.16 | 0 | 30 | 20 | 5 | 75 | 55 | 7 | கிழக்கு |
| 12.12.16 | 0 | 30 | 20 | 5 | 75 | 55 | 7 | கிழக்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ தற்போதைய வானிலையில் ஆந்ராக்ஸ் நோய் பரவ வாய்ப்புள்ளதால் அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையில் நோய் தடுப்பூசி போடவும்.
- ✓ தற்போதைய வானிலை மஞ்சளில் இலைப்புள்ளி நோய்க்கு சாதகமாக இருப்பதனால், 1 லிட்டர் தண்ணீருக்கு கார்பன்டசிம் 1 கிராம் அல்லது மேன்கோசெப் 2 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்கவும்.
- ✓ வறண்ட வானிலை நிலவுவதால் பூக்கும் பருவத்திலுள்ள ஒரு எக்டர் சம்பா நெல்லுக்கு 3வது மேலுரமாக தழைச்சத்து 38 கிலோவும் சாம்பல்சத்து 12.5 கிலோவும் இட்டு நீர் பாசனம் செய்யவும்.
- ✓ குறைந்த தட்பவெப்ப நிலை குறைந்து காணப்படுவதால் குலைநோய் வர வாய்ப்புள்ளது. எனவே ஒரு எக்டருக்கு 500 கிராம் கார்பன்டசிமை 500 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவும்

**குறுஞ்செய்தி**

- ✓ தற்போதைய வானிலை மஞ்சளில் இலைப்புள்ளி நோய்க்கு சாதகமாக இருப்பதனால், 1 லிட்டர் தண்ணீருக்கு கார்பன்டசிம் 1 கிராம் அல்லது மேன்கோசெப் 2 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்கவும்.

.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்
த.நா.வே.ப.கழகம், கோவை.